DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.238/2020**

| | | | |
|---|---|---|---|
| Name | : | சுப்பையா | **Pw2** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of July 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்தவர் என்னுடைய பக்கத்துவீட்டுக்காரர். விபத்தில் இறந்தவரை சிறுவயதில் இருந்தே எனக்கு தெரியும். அவர் எனக்கு தூரத்து தம்பி முறை வேண்டும். காவல் நிலையத்தில் விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் அளித்தேன். இரவு 7.30 மணிக்கு விபத்து நடந்தது. விபத்து நடந்த ரோடு கொல்லம்–திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த ரோட்டில் எப்போதும் கார், பஸ் போன்றவை போய் வந்துகொண்டிருக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். அவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் விளக்கு

நல்ல வெளிச்சமாகத்தான் இருந்தது. விபத்து நடந்த இடத்தில் மின்சார விளக்குகள் எதுவும் இல்லை. அந்த பகுதி வாகனங்கள் வந்து செல்லக்கூடிய பகுதி என்றால் சரிதான். அந்த வாகனம் நடுரோட்டில் தான் நின்றுகொண்டிருந்தது. நான் புகார் கொடுத்ததன் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் ஆபத்தான நிலையில் வாகனத்தை நிறுத்தி வைத்ததாக மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 122ன் கீழ் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புகார் அளித்ததன் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. இந்த விபத்து சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தைத் தவிர வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. இந்த வாகனமானது ரோட்டின் இடதுபுறம் மண் ரோட்டில் விளக்கு சமிஞ்ஞையுடன் நின்றுகொண்டிருந்தது என்றும், இறந்த நபர் தான் கவனிக்காமல் வாகனத்தை வேகமாக ஓட்டி நின்றுகொண்டிருந்த வாகனத்தின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. பைக்கின் பின்னால் அமர்ந்து சென்றதாகக் கூறுவது பொய் என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க புகாரை நான் அளித்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. இறந்தவரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத சம்பவத்தைப் பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்க முழுக்க இறந்தவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.07.19 16:39:38 +0530